அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 26/99

எனது இல: 11/309ஈ95/20,

அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.,

சுதந்திர சதுக்கம்.
கொழும்பு-07.

1999 நவம்பர் மாதம் 23 ஆந் திகதி,

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்,

அரச சேவையின் கனிஷ்ட தரங்களிலுள்ள
தற்காலிக, அமய, பதிலீட்டு ஊழியர்களை நிரந்தரப்படுத்தல்

1999 நவம்பர் மாதம் 01ஆந் திகதியில் 180 நாட்கள் தொடர்ச்சியாக சேவையாற்றியுள்ளவர்களும், வேலை, நடத்தை திருப்திகரமாக உள்ளவர்களுமான அரச சேவையின் தொழிலாளர் தரங்கள், அலுவலக பணியாளர் சேவை, மற்றும் சாரதியாளர் சேவையின் ஆட்சேர்ப்புத் தரங்களில் உள்ள தற்காலிக, அமய, பதிலீட்டு ஊழியர்கள் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்வார்களாயின் 1999 நவம்பர் மாதம் 01ஆந் திகதியிலிருந்து தமது சேவையில் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று அரசு தீர்மானித்துள்ளது.

1. அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணியில் வெற்றிடம் இருக்க வேண்டும்.

11. தற்போது வெற்றிடமாகியுள்ள அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்கிய நிரந்தர பதவியொன்றில் தொடர்ந்து சேவையாற்றி இருக்க வேண்டும்.

111. அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள தேவையான தகைமைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

02. இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு திணைக்களத்தின் கீழும் அவ்வாறு நிரந்தரப்படுத்தப்பட்ட ஊழியர்கள் பற்றிய தகவல்-களை அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு பிரதியுடன் தேசிய வரவு செலவுப் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

03. சம்பந்தப்பட்ட ஊழியர்களை நிரந்தரப்படுத்தலுடன் தொடர்பான நடவடிக்கைகள் யாவும் 1999 டிசெம்பர் மாதம் 31ஆந் திகதிக்கு முன் முடிக்க வேண்டும்.

(மகிந்த பந்துசேன.)

செயலாளர்.

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.